[1984 மார்ச் 28

(ஆ) திருமலை நாயக்கர், சொக்கப்ப நாயக்கர் சிலைகள் உள்ள திருவில்லிப்புத்தூர் சிவன் வசந்த மண்டபம் மூடப்பட்டிருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் அதை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, "திருவில்லிபுத்தூர் சிவன் கோவிலில் உள்ள திருமலை நாயக்கரின் சிலையும், சொக்கப்ப நாயக்கரின் சிலையும் உள்ள வசந்த மண்டபம் மூடப்பட்டுள்ளது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரை அடுத்துள்ள மிடவார்விளாகத்தில், உள்ள சிவன் கோயிலை ஒட்டியுள்ள மண்டபத்தில் திருமலை நாயக்கர் சிலையும், சொக்கப்ப நாயக்கர் சிலையும் உள்ளன. மேற்படி மண்டபத்தினை சிவில் சப்ளை இலாகாவிற்கு 1975 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மாத வாடகை ரூ. 1,500 ஆகும். வாடகை காலம் 16-9-1976 இல் ஆரம்பித்து 4-8-1984 இல் முடிவடைகிறது. மேற்படி மண்டபத்தினை நெல்சேகரம் செய்யும் கிடங்காக சிவில் சப்ளை இலாகாவினர் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி இரு சிலைகளும் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு இரும்புக் கம்பி வலையால் மூடப்பட்டுள்ளன.

மேற்படி திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 92,000. மேற்படி மண்டபம் மூலம் ஆண்டுக்கு வாடகை ரூ. 18,000 வருமானம் கிடைக்கிறது. மேலும் மேற்படி திருக்கோயிலின் தேர்த் திருவிழா 5ஆம் நாளன்று சிலைக்கு பரிவட்டம் மரியாதை செய்யப்படுகிறது. இதற்கு சிவில் சப்ளை இலாகாவினர் வசதி செய்து தருகிறார்கள். எனவே திருக்கோயிலுக்கு வருமானத்தைப் பெருக்கும் பொருட்டே மண்டபம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. சிலைகள் கம்பி வலைகளால் பாதுகாப்பாக மூடப்பட்டுள்ளன.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து இவ் விஷயத்தில் அரசால் கோவிலின் நலன் பேணப்படுகிறதென்றும், தேர்த் திருவிழாவின் போது வழிபாட்டிற்காகவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

1984 மார்ச் 28]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள சிவன் கோவிலில் உள்ள திருமலை நாயக்கருடைய சிலையைப் போலவும், சொக்கப்ப நாயக்கருடைய சிலையைப் போலவும் மதுரையிலும் இருக்கின்றன. ஆனால் ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருக்கிற சிலைகள் மிகவும் பிரம்மாண்டமாகவும், அழகாகவும் இருக்கின்றன. அந்தச் சிலைகளைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் அதிகமாக வருகிறார்கள். தாலுக்கா நாயுடு சங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் நாயுடு சங்கம், தமிழ்நாடு மாநில நாயுடு சங்கம் ஆகியவைகளிலிருந்து இந்த வசந்த மண்டபத்தைத் திறந்துவிட வேண்டும்; அந்தச் சிலைகளை நாங்கள் தெய்வமாக கும்பிட்டுக் கொண்டிருக்கிறோம். திருவிழாக் காலங்களில் மட்டுமல்லாமல் தினமும் நாங்கள் அவைகளை வழிபாடு செய்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த மண்டபத்தை தெய்வ வழிபாட்டிற்காக திறந்து விட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே மத உணர்வு உள்ளவர்களின் மனம் புண்படாத அளவிற்கு செய்வதற்கு சிவில் சப்ளை கார்ப்பரேஷனிடத்திலே உள்ள கிட்டங்கியை காலி செய்ய வேண்டும். அப்படிச் செய்து நாயுடு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் இந்தச் சிலைகளை வழிபாடு செய்வதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே இருப்பவை வழிபாட்டிற்குரிய ஆண்டவர்களின் சிலைகள் அல்ல. பாண்டி மண்டலத்தில் மதுரையில் ஆண்ட திருமலை நாயக்கர், சொக்கப்ப நாயக்கர் ஆகியவர்களின் சிலைகளாகும். ஆனால் எந்த சிலைகளானாலும், வீரர்களின் சிலைகள் ஆனாலும், அறிஞர்களின் சிலைகளானாலும், அவைகள் போற்றப்படுகிற, வணக்கத்திற்குரிய, மரியாதைக்குரிய சிலைகள்தான். ஆனால் ஒரு காலத்தில் ஆலயங்களுக்கு வருமானம் இல்லையென்ற காரணத்தாலோ, அல்லது இப்படிப்பட்ட மண்டபங்கள் அர்த்தமற்ற முறையில் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன என்ற காரணத்தினாலோ என்னவோ தெரியாது; இவைகளை எல்லாம் வாடகைக்கு விட்டு விட்டார்கள். இந்த அரசு இப்படிப்பட்ட கலை சிறப்புள்ள, நாமெல்லாம் போற்றி பாதுகாக்க வேண்டிய கருவூலமாக உள்ள மண்டபங்களை, சிலைகளை பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையில் அவைகளை எல்லாம், கிடங்குகளாகப் பயன்படுத்தக் கூடாது; அவைகளை வாடகைக்கு விடக்கூடாது என்று தெரிவித்து இருக்கிறோம். ஆகவே இந்த தவணை காலம் முடிந்ததற்குப் பிறகு உணவு வழங்கு துறையிடத்தில் சொல்லி, அதை வேறு இடத்திற்கு மாற்றும்படி அறநிலையத் துறை கேட்டுக்கொள்ளும். அது முறையாக பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பூரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருமலை நாயக்கரின் 400-வது பிறந்த நாள் விழாவை அரசு மிகச் சிறப்பாக நடத்த இருக்கிறது. அந்த விழாவிற்கான ஊர்வலம் அந்த சிவன் கோவிலில் இருந்துதான் ஆரம்பிக்க இருக்கிறது. ஆகவே, அந்த பிறந்த தின விழாவை முன்னிட்டு, அங்கே திருப்பணி வேலைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புவதோடு, அங்கே கம்பிவலை போட்டு பாதுகாக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்களின் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே அது தூசு படிந்து இருக்கிறது. அந்த சிலையின், மீது அந்த இடத்தைப் பெருக்குவதற்காக வைத்துள்ள விளக்குமாறை வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அளித்துள்ளது தவறான தகவல் என்று சொல்லிக்கொண்டு, அந்தக் கோவிலுக்குச் செல்பவர்களின் மனதில் எந்தவிதமான கெட்ட எண்ணமும் எழாதவண்ணம் அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே என்னிடத்தில் தரப்பட்டுள்ள குறிப்பின்படி அது நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது? ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படியில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியாக இருக்குமானால் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்குத் தகுந்த பாதுகாப்புத் தந்து, அந்தப் பணியை முறைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 400-வது ஆண்டு விழா பற்றி சொன்னார்கள். திருப்பணி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக அமைக்கப்பட்டுள்ள விழாக் கமிட்டியினர் பல வேண்டுகோளை அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த வேண்டுகோள்களில் அரசு எதையெதை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு எடுக்கிறதோ, அந்தந்த முடிவுகளின் அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

5. அறிக்கை அளித்தல்.

உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, ' வணிக ஒற்றுமை ' திங்களிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.